IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 26/2023

Deposition of Witness : PW 1

Name : மைதிலி (வயது – 51)

Father's Name /W/o : க/பெ பழனிவேல்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : சென்னை

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 12.11.2025.

## குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் 2 ஆம் வாதி என்றால் சரிதான். நான் மற்ற வாதிகளுக்கும் சேர்த்து வாக்குமூலம் கொடுக்கிறேனா என்றால் சரிதான். 1 மற்றும் 3 வாதிகளை விசாரணை செய்ய போவதில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் 1 ஆம் பிரதிவாதி பவானி பழனிவேல் மனைவி என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆம். எனக்கும் பழனிவேல் என்பவருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 05.02.2003 தேதியில் திருமணம் நடைபெற்றது.

2. எனக்கும் பழனிவேல் என்பவருக்கும் கருத்து வேறுபாட்டின் காரணமாக சென்னை குடும்ப நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் சரிதான். மேற்படி மனு எனக்கு எதிராக 02.01.2008 தேதியில் திருமணம் முறிவு செய்து குடும்ப நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தார்களா என்றால் ஒருதலைபட்சமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

3. 02.01.2008 தேதியில் குடும்ப நீதிமன்றத்தில் பிறப்பித்த உத்தரவு பிறகு பவானி என்பவரை 14.07.2008 தேதியில் திருமணம் செய்து கொண்டார் என்றால் நான் 03.01.2008 தேதியில் சென்னை குடும்ப நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ஒத்திவைக்க மனு அளித்தேன். அதன் பிறகு நீதிமன்றத்திற்கு வராமல் இருந்தார் அவருக்கு மறுதிருமணம் நடைந்தது தெரியாது. பழனிவேல் 14.07.2008 தேதியில் சட்டப்படி திருமணம் செய்தார் என்றாலும் 03.01.2008 தேதியில் மேற்படி உத்தரவு ரத்து செய்யப்பட்டதா என்றால் மனு நிலுவையில் இருந்தது அவர் நீதிமன்றத்திற்கு வரவில்லை.

4. குடும்ப நல நீதிமன்றத்தில் 03.01.2008 தேதியில் மனு அளித்தேன் என்றாலும் அதன் பிறகு தான் பழனிவேல் மறு திருமணம் செய்தார் என்பதற்கு மேற்படி மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பழனிவேல் முதல் பிரதிவாதியை திருமணம் செய்த பிறகு 16.09.2011 தேதியில் தான் சென்னை குடும்ப நல நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றாலும் அதற்கு முன் பழனிவேல் 1 ஆம் பிரதிவாதியை திருமணம் செய்தது செல்லும் என்றால் நீதிமன்றத்திற்கு வராமல் என்னை ஏமாற்ற வேண்டும் என்று திருமணம் நடத்தினார்.

5. பவானி என்பவரை பழனிவேல் திருமணம் செய்த பிறகு பவானியுடன் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். அவரை மிரட்டி அவருடன் வாழ வைத்தார். நான தாக்கல் செய்துள்ள மனுவில் முதல் பிரதிவாதி பழனிவேலை மிரட்டி அவருடன் வாழ்ந்து வந்தார் என்ற விபரம் என் தாவாவில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பழனிவேல் மற்றும் முதல் பிரதிவாதிக்கும் பிறந்தவர்கள் 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகள் என்றால் சரிதான். முதல் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்ட பிறகு பழனிவேல் இன் பெற்றோர் வீட்டில் தான் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள் அதன்படி இரண்டு குழந்தைகளும் பிறந்தது என்றாலும் பழனிவேலை 1 ஆம் பிரதிவாதி மிரட்டவில்லை என்றால் இல்லை.

6. பழனிவேல் தென்னக ரயில்வேயில் லோகோ பைலட் ஆக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதியை பழனிவேல் திருமணம் செய்தபிறகு பணி ஓய்வு பதிவேடு மற்றும் மருத்துவ அட்டை ஆகியவற்றில் 1 ஆம் பிரதிவாதி மற்றும் அவர் பிள்ளைகள் பெயரை பதிவு செய்து இருக்கிறார் என்றால் 2014 ஆம் ஆண்டில் என் பெயர் மற்றும் என் மகன் பெயர் பணி ஓய்வு பதிவேடு மற்றும் மருத்துவ அட்டையில் உள்ளது என்றும் 1 ஆம் பிரதிவாதி மற்றும் அவர்கள் பிள்ளைகள் பெயரை எடுத்துவிட்டதாக ரயில்வேயில் இருந்து தெரிவித்தார்கள்.

7. மேற்படி தகவல் அறியும் உரிமை படி நான் ரயில்வேயிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்பதற்கு ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. பழனிவேல் 29.08.2021 தேதியில் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் சென்னை வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் காலமானார் என்றால் சரிதான். பழனிவேல் இறப்பிற்கு பின் 1 ஆம் பிரதிவாதிக்கு பணிபுரியும் இடத்தில் ஈமசடங்கு செலவுக்காக பணம் ரூ.25000/– கொடுத்தார்கள் என்றால் தெரியாது.

8. பவானி என்பவர் தான் சட்டப்படி மனைவி என்பதால் ரயில்வேயில் இருந்து பணம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வருவாய் துறையில் 1 முதல் 3 பிரதிவாதிகளை பழனிவேலின் வாரிசு என்று வாரிசு சான்றிதழ் வழங்கினார்களா என்றால் இல்லை. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மைனர் என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் பழனிவேல் மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கு பிறந்த பிள்ளைகள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 1 முதல் 3 வாதிகள் மற்றும் 2, 3 பிரதிவாதிகள் பழனிவேலின் வாரிசு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் பழனிவேலுக்கு விவாகரத்து ஆன பிறகு தான் 1 ஆம் பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்றது என்றாலும் அதனால் அவர்களும் சட்டப்படி பழனிவேலின் வாரிசு என்றால் சரியல்ல.

9. சென்னை குடும்ப நல 2 ஆம் கூடுதல் நீதிமன்றத்தில் நான் பழனிவேல் வாரிசு என்று தாக்கல் செய்த வழக்கில் 1 ஆம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து உத்தரவு வாங்கினேனா என்றால் சேர்த்துள்ளேன். மேற்படி வழக்கில் வா.சா.ஆ – 2 நானும் சட்டப்படியான வாரிசு என்று மட்டுமே தெரிவித்துள்ளது என்றாலும் 1 ஆம் பிரதிவாதி வாரிசு இல்லை என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவை ஒத்திவைக்க 1 ஆம் பிரதிவாதி மனு அளித்தாரா என்றால் ஆம். ஆனால் மேற்படி மனு நிராகரிக்கப்பட்டது (DISMISS).

10. வா.சா.ஆ – 2 ஆவணத்தில் பவானி வாரிசு கிடையாது என்று தெரிவிக்கவில்லை என்றால் மேற்படி வழக்கை சட்டப்படி நான் தான் மனைவி என்பதற்கு போடப்பட்டது மேற்படி தீர்ப்பை நான் தான் பழனிவேலின் சட்டப்படி மனைவி என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.